**கொழும்பு பல்கலைக்கழகம் - 2017**

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழங்கள் அதிகாரச் சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை**

1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்திற்கு முரணாக மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மற்றும் உயர் கல்வி அமைச்சரின் விதப்புரையுடன் அமைச்சரவையின் அங்கீகாரம் இன்றி கலம்பு ஸயன்ஸ் அன்ட் டென்னொலொஜி செல் என்ற பேரில் பிணையினால் வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்று 2013 ஆண்டின் போது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீட பீடாதிபதி உட்பட 09 விரிவுரையாளர்கள் இக் கம்பனியின் பணிப்பாளர் சபையில் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

இந்தக் கம்பனியின் தலைமை அலுவலகம் கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு சொந்தமான கட்டிடமொன்றில் நிறுவப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு சொந்தமாகக் காணப்படும் கணனிகள் துணைக் கருவிகள் உட்பட ஏனைய பௌதீக மற்றும் மனிதவளங்களை பயன்படுத்தியிருந்த போதிலும் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமாக ஆதனங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக இணக்கப்பாட்டு உடன்படிக்கை ஒன்றிற்கு உட்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் வளங்களை பயன்படுத்தலுக்காக ரூபா 246,144 தொகையொன்று மாத்திரம் பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பராமரிப்பு பிரிவின் 2017 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை மற்றும் பட்டியல்களை இணக்கம் செய்யும் போது, அவற்றில் குறிப்பிடப்பட்டிருந்த பொருள் அலகுகளின் விலைகளிடையே வேறுபாடுகளை காணக்கூடியதாக இருந்தது. அதற்கமைய 2017 திசெம்பர் 31 ஆந் திகதி மாதிரிக்கு உட்படுத்தப்பட்ட இருப்பின் பெறுமதி ரூபா 9,088,403 இனால் அதிகரித்து கணக்கிடப்பட்டிருந்தது. மேலும் அந்த பிரிவின் களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 16,819 பெறுமதியான இருப்பானது இறுதி இருப்பாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மருத்துவ பீடத்தினதும் விஞ்ஞான பீடத்தினதும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 10,804,891 தொகையான இருப்பொன்று காணப்பட்டதுடன், அந்த இருப்பானது இறுதி இருப்பாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டின் போது 02 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் தீர்க்கப்பட்டிராத ரூபா 223,050 கூட்டுத்தொகையான முற்பணங்கள் தீர்க்கப்படாத முற்பணங்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாது செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) காசுப்பாய்ச்சல் கூற்றினை பரிசோதனை செய்தபோது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) நிதிச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த அரச மானியங்களின் பெறுமதிக்கு மேலதிகமாக ஒதுக்கங்கள் மற்றும் நிதியங்களின் கீழ் கணக்குகளுக்கிடையேயான வகைமாற்றமான ரூபா 542,597,096 பெறுமதியான செலவிடப்படாத மூலதன மானியங்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசுப் பெறுவனவாக சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. மேலும், முதலீட்டு நடவடிக்கைகளின் கீழான காசாக நிறுவனத்திற்கு கிடைக்காத ரூபா 363,760 பெறுமதியான அந்நிய செலாவணி வருமானத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ii) சேமிப்புக் கணக்கில் நிலவிய ரூபா 146,808 தொகையான மீதியானது நிதி நிலைமைக்கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமனானவற்றின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது முதலீட்டின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) ஏனைய பெறுவனவுகள் மற்றும் முற்பணங்களின் கீழ் நிதி நிலைமைக்கூற்றின் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த முறையே ரூபா 2,139,915 தொகை மற்றும் ரூபா 174,478,148 தொகை காசுப்பாய்ச்சலினை தயாரிக்கும் போது செயற்பாட்டு மூலதன வேறுபாட்டின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விஞ்ஞான பீடத்திற்குரிய நானாவித முற்பணப் பதிவேட்டிற்கமைய 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக தீர்க்கப்படாத மீதிகள் ரூபா 298,963 ஆக காணப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மீதியானது ரூபா 358,963 ஆனமையால் முற்பணப் பெறுமதியில் ரூபா 60,000 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

(ஆ) பாடநெறி வருமானங்களை சேகரிக்கும் சேமிப்புக் கணக்கின் மீதியானது 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 690,282 ஆன போதிலும், வங்கி மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் அந்த மீதியானது ரூபா 7,091,000 ஆனமையால் ரூபா 6,400,718 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தினால் 15 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 3,711,000 தொகையான கடன் பணத்தில் ரூபா 1,348,995 தொகையான கடன் மிதிகள் 02 முதல் 15 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படுகின்றதுடன், அந்த மீதியை அறவிட முடியாதிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தில் வருடாந்தம் நடாத்தப்படும் விளையாட்டு விழாவிற்குரிய செலவினங்களை தீர்ப்பதற்காக Amalgamated Club Loan ஆக 2015, 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் வழங்கப்பட்டிருந்த முற்பண தொகையில் ரூபா 4,474,645 தொகையான மீதியானது கணக்காய்வு திகதியான 2018 செப்தம்பர் 14 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணக்கமின்மை**

---

பின்வரும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| (i) XIX ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பந்தி | - வீட்டு வாடகைகளை அறவிடும் போது கவனத்திற்கொள்ளப்படும் பிரமாணங்களுக்கு முரணாக பல்கலைக்கழகங்கள் கட்டுப்பாட்டுச் சபையினால் 2015 யூலை 09 ஆந் திகதி நடாத்தப்பட்ட 496 ஆம் கட்டுப்பாட்டுச் சபை கூட்டத்தின் போது குடும்ப வீடமைப்பு உத்தியோகத்தர் ஒருவரின் அடிப்படை சம்பளத்தில் 10 சதவீதமும், 2016 மார்ச் 09 ஆந் திகதி நடாத்தப்பட்ட 506 ஆம் கட்டுப்பாட்டுச் சபை கூட்டத்தின் போது தனியொரு உத்தியோகத்தரின் அடிப்படைச் சம்பளத்தின் 3 சதவீதமுமாக வீட்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது.<br>- 7/7/9 ஆம் இலக்க 1,050 கன அடிகள் கொண்ட பல்கலைக்கழகத்தின் பதிவாளருக்கு 2002 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் ஒப்படைக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லத்திற்காக சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் வீட்டு வாடகை அறவிடாதிருக்க 2014 செப்தம்பர் 10 ஆந் திகதி நடாத்தப்பட்ட 487 ஆம் பல்கலைக்கழக கட்டுப்பாட்டுக் குழு தீர்மானித்திருந்தது. |
| (ii) XIX ஆம் அத்தியாயத்தின் 6 ஆம் பந்தி | - ஏதேனுமொரு பதவிக்கு ஒதுக்கப்பட்ட வீட்டினை தவிர ஏனைய அனைத்து வீடுகளினதும் குத்தகை காலமானது 05 வருடங்களாக இருந்த போதிலும் 09 வீடுகளின் உத்தியோகத்தர்கள் 06 முதல் 16 வருடங்கள் வரையான காலமாக குடியிருப்பதாக அவதானிக்கப்பட்டது. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை
--------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 104 (3) மற்றும் (4) | | பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான ரூபா 4,750,000 பெறுமதியான மோட்டார் வாகனம் 2017 சனவரி 03 ஆந் திகதி விபத்திற்குள்ளாகியிருந்ததுடன், இந்த விபத்து தொடர்பில் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட்டு பொறுப்புகூற வேண்டிய தரப்பினர் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. விபத்து தொடர்பில் ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ஆரம்ப அறிக்கை மற்றும் முழுமையான அறிக்கையொன்று முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 371 மற்றும் 2015 ஜூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | - | முற்பணம் வழங்கும் போது வழங்கப்படக்கூடிய ஆகக்கூடிய முற்பணத் தொகை ரூபா 100,000 இற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும், ரூபா 130,618 முதல் ரூபா 150,000 தொகையான வீச்சில் ஸ்ரீபாளி மண்டபத்தில் 03 சந்தர்ப்பங்களில் ரூபா 412,619 கூட்டுத்தொகையான முற்பணங்களும், பல்கலைக்கழகத்தின் 16 உத்தியோகத்தர்களுக்கு 14 சந்தர்ப்பங்களில் ரூபா 150,422 முதல் ரூபா 369,150 வரையான வீச்சில் ரூபா 4,153,393 கூட்டுத்தொகையான முற்பணங்களும் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு தேகையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| | | - | பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் உரிய பணி நிறைவடைந்ததும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும், ஸ்ரீபாளி மண்டபத்தில் 06 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 361,540 பெறுமதியான முற்பணங்கள் 2018 சனவரி 10 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிராததுடன், தீர்க்கப்படாத காலவீச்சானது 13 நாட்கள் முதல் 12 மாதங்கள் வரையானது என அவதானிக்கப்பட்டது. மேலும், பல்கலைக்கழகத்தினால் 2012, 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் 22 சந்தர்ப்பங்களில் நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,411,812 பெறுமதியான முற்பணங்கள் கணக்காய்வு திகதியான 2018 ஆகஸ்ட் 17 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும், மீளாய்வண்டினுள் பேராசிரியர்களுக்கு ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக முற்பணமாக வழங்கப்பட்டிருந்த ரூபா 804,260 தொகை 2018 செப்தம்பர் 14 ஆந் திகதி வரையிலும் |

தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) பல்கலைக்கழகங்கள் தாபன விதிக்கோவை
---

| | |
|---|---|
| (i) XX ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் | பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா அனைத்து உத்தியோகத்தர்களினதும் உட்வருதல் மற்றும் வெளிச்செல்லல் ஆகிய நேரங்கள் பதிவு செய்ய வேண்டுமெனினும் 821 கல்விசார் உத்தியோகத்தர்களின் உள்வருதல் மற்றும் விடுமுறைகளை உறுதிப்படுத்தி யிருக்காமையால் சம்பளம் மற்றும் படிகள் என ரூபா 822,509,565 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) XXII ஆம் அத்தியாயத்தின் 11.1 ஆம் பிரிவு | பரிசோதனை உத்தியோகத்தர் இறுதி தீர்மானத்திற்கு வரும் வரையில் கூடியளவு இடைவிடாது கூடி மூன்று மாதங்களினுள் ஒழுக்காற்று நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். எவ்வாறெனினும், 2016 ஏப்ரல் 25 ஆந் திகதி பணி நீக்கத்திற்கு உட்படுத்தப்பட்ட பேராசிரியர் ஒருவர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் 2018 மார்ச் மாதம் வரையிலும் நிறைவு செய்யப்பட்டிராததுடன், 01 வருடமும் 10 மாதங்களும் கடந்திருந்தது. |
| (iii) XXVI ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவு | ஸ்ரீபாளி மண்டபத்தில் 2015 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட வாசிகசாலை புத்தக மதிப்பாய்வு அறிக்கைக்கமைய ரூபா 162,311 பெறுமதியான 713 புத்தகங்கள் மற்றும் ஐ.அ.டொலர் 126 பெறுமதியான 06 புத்தகங்கள் காணாமற் பேயிருந்ததுடன், இந்த காணாமற்போன புத்தகங்கள் தொடர்பில் தொடர்புடைய பிரமாணத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 1995 யூலை 14 ஆந் திகதிய 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடும் போது பரீட்சை நடாத்தப்பட்ட திகதியிலிருந்து 03 மாத காலப்பகுதியினுள் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டிய போதிலும், ஸ்ரீபாளி மண்டபத்தினால் மீளாய்வாண்டினுள்நடாத்தப்பட்ட 06 பரீட்சைகளின் பெறுபேறுகளை வெளியிடுவதற்காக 05 மாதங்கள் முதல் 12 மாதங்களுக்கிடைப்பட்ட காலம் கடந்திருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 100,339,281 ஆன மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 176,157,091 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக

மீளாய்வாண்டின் போது நிதி விளைவுகள் ரூபா 75,817,810 தொகையினால் வீழ்ச்சியடைந்திருந்தது. அரசின் மற்றும் ஏனைய மானியங்கள் ரூபா 143,645,382 தொகையினால் அதிகரித்திருந்த போதிலும் ஊழியர் ஊதியம் ரூபா 274,467,864 இனால் அதிகரித்தல் மேற்கூறிய வீழ்ச்சிக்கு முக்கியமாக பாதித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 வருடங்களினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டு நிலவிய ரூபா 214,339,468 ஆன மிகையானது தளம்பலுடன் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 100,339,281 ஆகியிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், அரசுக்கு செலுத்திய வரிகள் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வினை மீண்டும் சீராக்கல் செய்த போது 2013 ஆண்டு ரூபா 1,788,616,882 ஆக காணப்பட்ட நிறுவனத்தின் பங்களிப்பு இடையறாது வளர்ச்சியடைந்து மீளாய்வாண்டின் போது ரூபா 3,198,399,374 தொகையாகியிருந்தது.

### 3.2 நிறுவனத்தினால் மற்றும் நிறுவனத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

2000 ஆம் ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கொழும்பு பல்கலைக்கழகம் தொடர்பிலான நிறைவு செய்யப்படாத 37 வழக்கு நடவடிக்கைகள் காணப்பட்டதுடன், இந்த வழக்கு நடவடிக்கைகள் 03 முதல் 17 வருடங்கள் வரையான காலவீச்சிற்கு உரியனவாகும். மேலும், மீளாய்வாண்டிற்கான சட்ட செலவினங்களாக ரூபா 3,373,674 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 செயற்பாடு மற்றும் மீளாய்வு

2016 ஆம் ஆண்டு முதல் கொழும்பு பல்கலைக்கழக வளாகத்தில் கட்டிடமொன்று மற்றும் உள்ளபடியான பதவியணி இணைப்பு மையமொன்றிற்காக (VCUC – CC) ஒதுக்கப்பட்டிருந்ததுடன், இதற்காக 21 ஆம் நூற்றாண்டிற்கான உயர் கல்வி (HETC) செயற்திட்டத்தின் மூலம் 2013, 2014 மற்றும் 2015 ஆகிய வருடங்களில் ரூபா 1,341,239 பெறுமதியான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணி இணைத்துக்கொள்ளப்படாமையால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தின் பிக்குகள் விடுதி 2006 ஆம் ஆண்டு முதல் குத்தகை வாடகை அடிப்படையில் தனியார் கட்டிடமொன்றில் நடாத்திச் செல்லப்பட்டிருந்ததுடன், மாதாந்த வாடகையாக ரூபா 325,000 படி 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 3,900,000 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. விடுதியின் பழுதுபார்த்தல் நடடிக்கைகள் குத்தகையாளரால் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற நிபந்தனை 2017 சனவரி 18 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட குத்தகை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், விடுதியானது பல வருடங்களாக பழுதுபார்க்கப்பட்டிராமையால் குளியலறைகள் மற்றும் மலசலகூடம் ஆகியன பயன்படுத்தமுடியாத நிலைக்கு உள்ளாகியிருந்ததுடன், சுவர்கள் நிறம் மங்கிப்போயிருந்தன. 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வாடகை அடிப்படையில் நடாத்திச் செல்லப்படும் விடுதிக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 25,555,000 தொகையான பணம் வாடகை அடிப்படையில்

செலுத்தப்பட்டிருந்தது. பல்கலைக்கழகத்திற்கு நிரந்தரமாக பிக்குகள் விடுதியொன்று தேவையான போதிலும், இது வரையிலும் அந்த பணி நிறைவடைந்திருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) வாகன பழுதுபார்த்தல் கோவைகளை பரிசோதிக்கும் போது வாகன விபத்துகளாக இனங்காணக்கூடிய பழுதுபார்த்தல்கள் மற்றும் நேரடியாக விபத்துகள் தொடர்பில் பதிவு கோவைகளில் காணப்பட்ட போதிலும், அதற்குரியதாக பல்கலைக்கழகங்கள் தாபனவிதிக் கோவையின் 6 ஆம் பிரிவிற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபத்துகள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்காமையால் விபத்துகள் தொடர்பில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிராத நிலமையொன்று காணப்படுவதாகவும், பழுதுபார்த்தல் செலவினங்களுக்காக காப்பீட்டினை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பமும் இழக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2017 சனவரி முதல் நவம்பர் வரையிலும் வழங்குநர்களுக்கு அனுப்பப்பட்டிருந்த ரூபா 1,917,285 பெறுமதியான 34 கட்டளைகளுக்குரிய பொருட்கள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு ஐயவினாவின் பின்னர் அந்த கட்டளைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) விஞ்ஞான பீடத்திற்காக 515 மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான இயலுமை காணப்பட்ட போதிலும், 2017 ஆம் கல்வியாண்டிற்காக இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த மாணவர்களின் எண்ணிக்கை 404 மாத்திரமாகும். அதற்கமைய 111 மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்திற்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) ஸ்ரீபாளி மண்டபம்
---------------------------------------------

(i) மண்டபத்தின் ஆண்கள் விடுதி மற்றும் 3 விரிவுரை மண்டபங்கள் மிகவும் பழமையானவையாக இருந்ததுடன், நீண்ட காலமாக பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள பொருத்தமற்ற நிலையிலிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) நிர்வாக கட்டிடத்தினுள் போதியளவான இடவசதி இல்லாதிருந்தமையாலும், பொது வசதிகள் குறைவடைந்தமையாலும் கட்டிடத்தின் ஒரு பகுதி வெடிப்பிற்குள்ளாகி தாழிறங்கும் அச்சுறுத்தலொன்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அந்த நிலமையின் அடிப்படையில் மற்றுமொரு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2016 ஒக்தோபர் 28 ஆந் திகதி உயர் கல்வி அமைச்சிலிருந்து ரூபா 149.47 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2018 ஒக்தோபர் 08 ஆந் திகதி வரையிலும் கட்டிடத்தின் நிர்மாணத்திற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) மண்டபத்திற்கு சொந்தமாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக பொருத்தமான கலைக்கூடமொன்னு இல்லாதிருந்ததுடன், மாணவர்களின் பிரயோக பரிசோதனைகளுக்காக வெளிச்சம் காணப்பட வேண்டிய போதிலும், அவர்களுக்கு அந்த வசதிகள் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iv) விரிவுரை கட்டமைப்பு திட்டம் மற்றும் பாட கால அட்டவணைகளுக்கமைய ஒவ்வொரு விரிவுரையாளராலும் நடாத்தப்பட வேண்டிய விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை மற்றும் உள்ளபடியாக நடாத்தப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை ஆகியவற்றை ஒப்பிடும் போது

சில விரிவுரையாளர்களால் நேர அட்டவணையிலுள்ள விரிவுரை மணித்தியாலங்களை நிறைவு செய்யாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(v) கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் பரீட்சைகளை நடாத்தும் நாட்கள் காலத் திட்டமொன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான உத்தேச திகதிகளின்றி 04 பாடநெறிகளுக்காக 05 பரீட்சைகள் நடாத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.3 தொழிற்படு செயற்பாடுகள்

நிதிக்கூற்றுக்களுக்கமைய ஏலமிடப்படக்கூடிய பொருட்களின் பெறுமதி ரூபா 2,888,935 ஆக காண்பிக்கப்படுவதுடன், இவற்றுள் ரூபா 1,455,582 பெறுமதியான பொருட்கள் 2014 மற்றும் 2016 ஆகிய வருடங்களில் ஏலமிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டவையான போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த பொருட்கள் ஏலமிடப்பட்டிருக்கவில்லை.

### 4.4 உடன்படிக்கைகள் மற்றும் பிணைமுறிகள் அத்துமீறப்படுதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 32 பேராசிரியர்களால் உடன்படிக்கை மீறப்பட்டமையால் ரூபா 43,349,296 தொகையான பணம் அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. அவற்றுள் 10 பேராசிரியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 18,358,698 தொகையான மீதி 21 முதல் 40 வருடங்கள் கடந்திருந்த போதிலும், எவ்வித பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 4.5 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்விசார் பதவியணி

கல்விசார் பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 753 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை 190 ஆகும். இவற்றுள் சிரேஷ்ட விரிவுரையாளர் மற்றும் பேராசிரியர் பதவிகளின் 30 வெற்றிடங்கள் நிலவியதுடன், 2017 ஆம் ஆண்டின் போது வெளி விரிவுரையாளர்கள் 263 பேர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 143,602,216 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கல்விசாரா பதவியணி

(i). கல்விசாரா பதவியணியில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 1,119 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான 278 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட 301 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் 66 பதவிகள் வெற்றிடமாக இருந்ததுடன், உயர் கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்படும் பெயர்ப்பட்டியல் மூலம் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நேர்கின்றமையால் தாமதங்கள் நிலவுவதாக உபவேந்தரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ii). தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தகவல் தொடர்பாடல்) பதவிகள் முறையே 05 மற்றும் 19 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தகவல் தொடர்பாடல்) பதவிகளுக்காக ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று

வெளியிடப்பட்டிராமையால் அதன் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்ததாக உபவேந்தர் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

(iii). அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத சிரேஷ்ட சட்ட ஆலோசகர் பதவிக்காக 2015 செப்தம்பர் 9 ஆந் திகதி நடாத்தப்பட்ட 499 ஆம் கட்டுப்பாட்டு சபை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானமொன்றின் அடிப்படையில் பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அவரது கடமைகளுக்கு மேலதிகமாக நியமிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது நிர்வாக நிதியத்தில் அவருக்கு ரூபா 12,000,000 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.6 வாகனப் பயன்பாடு

2015 செப்தம்பர் 18 ஆந் திகதிய 13/2015 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கமைய பல்கலைக்கழகமொன்றின் உபவேந்தர், பதிவாளர், பிரதம நிதியாளர், நூலகர், பீடாதிபதி போன்ற பதவிகள் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு உரித்துடைய பதவிகளாகும். அவர்களுக்கு இணைப்பு செய்யப்பட்டுள்ள வாகனங்களுக்கான எரிபொருள் படிகள் மாதாந்த சம்பளத்திற்கு சேர்க்கப்பட்டு செலுத்தப்பட வேண்டிய போதிலும், குறித்த எந்தவொரு உத்தியோகத்தருக்கும் எரிபொருள் படிகளாக செலுத்தாது ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்களுக்காக பல்கலைக்கழக எரிபொருள் கட்டளைகள் மூலம் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய எரிபொருள் கட்டளைகள் மூலம் மாதாந்த எரிபொருள் படியினை மிகைத்து எரிபொருள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. 07 உத்தியோகத்தர்களுக்காக 2017 சனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையிலும் செலுத்த வேண்டிய எரிபொருள் படிகள் ரூபா 1,053,540 ஆன போதிலும், கட்டளைகள் மூலம் வழங்கப்பட்டிருந்த எரிபொருள்களின் பெறுமதியானது ரூபா 2,345,437 ஆகும். அதற்கமைய உரிய எரிபொருள் படியினை மிகைத்து ரூபா 1,291,897 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

## 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ‘‘கொள்கைத் திட்டம்’’ தொடர்பில் கொழும்பு பல்கலைக்கழகம் அறிந்திருந்ததுடன், அதன் பணிகளுடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைவதற்கான மைல்கற்களும் இலக்கினை அடைந்தமையை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது வறுமையை ஒழிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல், பாலினை அடிப்படையாக கொண்ட பாதீடு, ஊனமுற்றோரை பலப்படுத்தல், சூழல் பேணுகையை அதிகரித்தல் மற்றும் நீர் மற்றும் சக்திப் பாதுகாப்பு போன்ற நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 6.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

20 மீண்டெழும் செலவின விடயங்களின் பாதீட்டுச் செலவு மற்றும் உள்ளவாறான செலவு ஆகியவற்றை ஒப்பிடும் போது 40 சதவீதம் முதல் 153 சதவீதம் வரையான விலகல்கள் நிலவின. மூலதன மானியங்களின் கீழ் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல், பல்கலைக்கழகத்தினை சர்வதேசமயப்படுத்தல், அறிவினை மேம்படுத்தல் மற்றும் நிறுவன அபிவிருத்தி, மனிதவள மூலதன செயற்திட்டம் என்பவற்றுக்காக திறைசேரியிலிருந்து

கிடைத்த நிதியேற்பாடான ரூபா 52,902,908 தொகையானது ஆண்டினுள் கட்டிட மேம்படுத்தல் மற்றும் நிலையான சொத்துக்களை சுவீகரிக்கும் செலவின விடயங்களுக்கு வகைமாற்றம் செய்யப்பட்டிருந்தது. இதற்கமைய பாதீடாது தயாரிக்கப்பட்டு அவ்வப்போது மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு நடைமுறைச்சாத்தியமான கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் எடுக்கப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | செயற்படு நிருவாகம் | விடுதியில் உள்ள மாணவர்களுக்கு கல்வி விடயங்களை மேற்கொள்வதற்கு பொருத்தமான முறையில் விடுதிகளை பேணாமை மற்றும் வழக்கு நடவடிக்கைகளை துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள் | மீதிகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (இ) | பதவியணியினர் நிருவாகம் | ஆர்சேர்ப்பு நடைமுறையை துரிதப்படுத்ததாமை மற்றும் கல்விசார் பதவியணியினரின் உள்வருதல் பதிவு செய்யாமை. |
| (ஈ) | நூலக நிருவாகம் | காணாமற் போதல் தொடர்பான பதிவேடுகள் முறைப்படி பேணப்படாமை. |
| (உ) | களஞ்சியக் கட்டுப்பாடு | சரியான தகவல்கள் உள்ளடங்கிய பதிவேடுகள் பேணப்படாமை. |
| (ஊ) | வாகனப் பயன்பாடு | வாகன விபத்துகள் தொடர்பில் அறிக்கையிடாமை |